## 3. கவன ஈர்ப்பு.

**சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர்களுக்கும், இதர அலுவலர்களுக்கும் சம்பளம் கொடுக்காதது குறித்து.**

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் கடந்த மார்ச் திங்கள் முதல் சம்பளம் கொடுக்காததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து".

(பிற்பகல் 4-10)

*** மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மேலவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஜூன் மாதம் முதல் தேதியிலிருந்து தரப்பட வேண்டிய ஊதியத்தை வழங்க எவ்வளவு தொகை தேவைப்படும் என்று தெரிவிக்குமாறு மேற்படி கல்லூரி அறக்கட்டளையின் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநரால் கேட்டுக்கொள்ளப்பட்டார். இந்தத் தகவல் இயக்குநர் அலுவலகத்தில் 14—6—1977-க்குள் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும் என்று மேற்படி அறக்கட்டளையினர் கோரப்பட்டனர். குறித்த காலத்திற்குள் தகவல் கிடைக்காததால், கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தினரே மேற்படி அறக்கட்டளைக்குரிய மானியத் தொகையை தோராயமாகக் கணக்கிட்டு ரூ. 2,82,296 ஜூன் மாதம் 25-ம் நாள் கல்லூரிச் செயலருக்கு அனுப்பினர். அறக்கட்டளையின் நிர்வாகத்தினர் இந்தத் தொகையைப் பட்டுவாடா செய்யாமல் இருந்தனர். இதற்குக் காரணம் ஜூன் மாதத்திற்கு முன்னதாக மூன்று மாதங்களுக்குரிய சம்பளம் நிலுவை இருந்ததே ஆகும்.

கல்லூரிக் கல்வி இயக்குநர், 7—7—1977 அன்று பச்சையப்பன் கல்லூரி முதல்வரோடு தொடர்பு கொண்டதில் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஊதியம் நிலுவை ஏதுமின்றி நடப்பு ஜூன் மாதம் முடிய முற்றிலும் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது என்று

1977 ஜூலை 11] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்லூரி முதல்வர் கூறினர். ஆகவே பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் ஊதியம் நடப்பு ஜூன் மாதம் முடிய வழங்கப்பட்டு விட்டது என்று தெரிகிறது.

**திரு. வே. தங்கப்பாண்டியன் :** துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு இதே நிர்வாகத்தின் கீழ் உள்ள காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் கடந்த நான்கு மாதங்களாக ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் சம்பளம் கிடைக்காததால், அங்கேயுள்ள ஆசிரியர்கள் விரைவில் போராட்டம் தொடங்குவதாக அறிவித்துள்ளார்கள். மேலும், தமிழகத்தின் பல்வேறு தனியார் கல்லூரிகளில் ஆசிரியப் பெருமக்களுக்கு சம்பளம் தொடர்ந்து சில மாதங்களுக்குக் கொடுக்காத சூழ்நிலையைக் கருதி, அரசு ஏதேனும் பரிகாரம் காண, ஒரு குழு அமைத்து மாதந்தோறும் அவர்களுக்கு சம்பளம் கிடைக்க வழி செய்யும் வகையில் ஆக்கபூர்வமான காரியத்தில் இந்த அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதுபோன்ற குறைபாடுகளைக் கருத்தில் கொண்டுதான், இதுவரையில் தந்துள்ள மானியத் தொகையை உயர்த்தி, ஆசிரியர்களின் சம்பளத்தை சர்க்காரே தருவது என்று உத்தரவு போட்டு, அது இந்த 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்தது. இனிமேல் அப்படிப்பட்ட தகராறு எதுவும் வராமல் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியில் நான்கு மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதுபற்றி அரசின் நடவடிக்கையினைத் தெரிந்துகொள்ள முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அதுபற்றிய தகவல் இப்போது என்னிடம் இல்லை.

## 4. அரசின் தீர்மானம்.

**மத்திய கூட்டுறவு வங்கிகள், தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றுக்கு அரசு உத்தரவாத வரையறையை உயர்த்துதல்.**

**மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்:—

"மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் குறுகியக் காலக் கடன்,